## தலைப்பு 306 – இலங்கை புகையிரத திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக மீதியை அடிப்படையாகக் கொண்ட ஆண்டின் இறுதி இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், புத்தக மீதியை அடிப்படையாகக் கொண்டு இருப்பு பெறுமதி ரூபா 7,658,718,321 ஆக கணக்கீட்டு செய்யப்பட்டிருந்தது. | பதவியணியினர் பற்றாக்குறையின் அடிப்படையில் சரியான மூல தகவல்களுக்கு பிரவேசிப்பதில் வசதியீனமாக இருந்தது. | ஆண்டின் இறுதி இருப்பு பெறுமதி பௌதீக மீதியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

-------------------------------------

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்ட களஞ்சிய முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் மீதி மற்றும் மாதாந்த கணக்குகள் பொழிப்பின் பிரகாரம் காசாக பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கு இடையே முறையே ரூபா 46,654 மற்றும் ரூபா 393,996,074 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்குகளின் எண்ணிக்கை மாதாந்த கணக்கு பொழிப்புகளுடன் இணங்காதிருக்குமாயின் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து அறிக்கையிடுதல் வேண்டும். |

## 1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

--------------------------------------------------------------------------------

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையில் காண்பிக்கப்படாத போதிலும், மாதாந்த கணக்கு பொழிப்புகளில் 9153 குறியீட்டு இலக்கத்தின் கீழ் காணிக்காக வரவு வைத்தல் ரூபா 409,739,091,732 தொகை மற்றும் செலவு வைத்தல் ரூபா 77,072,687,967 ஆக பதியப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது பிரதான அலுவலகம் மற்றும் 03 உப திணைக்களங்களில் மாத்திரம் சொத்துக்களை கணக்கீடு செய்தலுக்கு CIGAS நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை யினால் இவ்வாறு ஏற்பட்டிருந்தது. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 30,563,559,457 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறைசேரி அச்சிடல்களில் (SA 82) கொள்வனவுகள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சொத்துக்களின் பட்டியலொன்றை பேணிச் செல்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது. | சொத்துக்களின் கொள்வனவு திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |
| (இ) | நிதியல்லா சொத்துக்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பெறுமதிக்கும், திறைசேரி அச்சிடல்களின் பெறுமதிகளுக்கும் இடையே போதியளவான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் முறையே ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா 417,717,025,337 தொகை, இறுதி மீதிகளுக்கு இடையே ரூபா 234,911,103,947 தொகை மற்றும் அகற்றப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 152,213,895,645 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | -மேற்படி- | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள், ஆதனங்களை இனங்கண்டு அவற்றின் உரித்தை உறுதிப்படுத்தி அவற்றின் சரியான பெறுமதி நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 களஞ்சிய முற்பண கணக்கு

----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களஞ்சிய முற்பண கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதி திணைக்கள புத்தகங்களின் பிரகாரமும், திறைசேரி கணனி அச்சிடல்களின் பிரகாரமும் சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 403,366,221 தொகை குறைக்கப்பட்டு திறைசேரி அச்சிடலின் பிரகாரம் மீதிக்கு சமனாக்கப்பட்டிருந்தது. இந்த மிகை மதிப்பீடு எவ்வாறு ஏற்பட்டது என இருப்பு விடயங்களிலிருந்தா என்பது தொடர்பாக போதியளவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், இந்த மீதியை கணக்குகளை சமப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட தொங்கல் மீதியொன்றாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பழைய மீதியாக இருந்தமையினால் தீர்த்து வைப்பதில் மிகவும் சீரற்ற நிலையொன்று காணப்படுகின்றமையை தெளிவுபடுத்துகின்றோம். | மிகை மதிப்பீடு ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இறக்குமதி பொருட்களுக்காக கொடுப்பனவுகளை செய்யும் போது ஆவணங்கள் சமர்ப்பிப்பதில் தாமதத்தின் அடிப்படையில் வங்கியினால் அறவிடப்பட்ட ரூபா 12,584,035 வட்டி பெறுமதி இருப்பு பெறுமதியில் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும், வெளிநாட்டு கொள்வனவுகளுக்குரிய கப்பல் கூட்டுத்தாபனத்தின் தாமத கட்டணமாக ரூபா 3,520,605 தொகையும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ரூபா 1,412,528 தொகையும் மற்றும் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 1,000,550 தொகையும் ஆக | இறக்குமதி பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது ஆவணங்கள் சமர்ப்பித்தலின் தாமதத்தின் அடிப்படையில் வங்கியினால் அறவிடப்பட்ட ரூபா 12,584,035 வட்டி பெறுமதி பொருள் இறக்குமதியின் அடிப்படையில் ஏற்பட்ட செலவினமாக இருந்தமையானல் அந்த தொகையும் இருப்பில் சீராக்கப்பட்டுள்ளது. | இருப்பு பெறுமதியில் சேர்க்கக் முடியுமான செலவினங்களை மாத்திரம் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 5,933,683 தொகை தாமதக் கட்டணமும் இருப்பு பெறுமதியில் சேர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருடாந்த இருப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 18,517,718 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) 1993 ஆம் ஆண்டு முதல் இது வரை பொருள் இறக்குமதிகளின் போது சுங்க கட்டணமாக செலவிடப்பட்ட ரூபா 94,559,163 தொகையான செலவினம் இது வரை இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொருள் பெறுவனவு பத்திரங்களை விரைவாக பெற்று இந்த மீதியை இருப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுங்க கட்டணமான நேர் செலவினங்களை இருப்பில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் "பீ" கணக்கு

---

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கட்டுப்பாட்டு கணக்கின் திணைக்கள புத்தகத்திற்கும், திறைசேரி புத்தகங்களுக்கும் இடையே ரூபா 4,177,805 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது 2004 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படும் ஒன்றாகும். | திறைசேரியுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வேறுபாட்டிற்கான காரணங்களை பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கும், தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் மீதி பொழிப்பின் கூட்டுத் தொகைக்கும் இடையே ரூபா 1,110,101 வேறுபாடு காணப்பட்டது. | மீதியை பதிவழிப்பதற்கு போதியளவான தகவல்கள் ஓய்வூதிய பணிப்பாளரிடம் இருந்தும், பிரதேச செயலகங்களில் இருந்தும் கிடைக்கப் பெறாமை இதற்கான காரணமாக இருந்தது. | -மேற்படி- |
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள், காசுப் பாய்ச்சல் கூற்றுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மாதாந்த கணக்குகள் பொழிப்பின் பிராகாரம் கடன் செலுத்துகைகள் மற்றும் கடன் அறவிடல்களுக்கு இடையே முறையே ரூபா 118,301,258 தொகை மற்றும் ரூபா 192,649 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | 2021 ஆம் ஆண்டின் போது அது தொடர்பாக கவனத்தில் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

-------------------------------------------------------------------------------

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச்செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------- | ----------------------------------- |
| (அ) | நிதிப் பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி வேதன பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | அலுவலக சேவைக்காக ஈடுபடுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைத்தல் மற்றும் அந்த பதவிகளின் வெற்றிடங்கள் அளவு மிகையாக இருந்தமையின் | நிதிப் பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி வேதனப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக இந்த திணைக்களத்தின் பதவியணியினர் 14,000 இற்கு அண்மித்த ஊழியர் தரப்பின் சம்பளங்களை தயாரிக்கும் செயற்பாட்டில் சகல பிரிவுகளுக்காகவும் ஆளணி வேதனப் பதிவேட்டை தயாரித்தல் மற்றும் நாளது வரையாக்குதலில் சீரற்ற நிலை காணப்பட்டது. | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 454(1) இன் பிரகாரம் பொருள் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை. | உப திணைக்களத்திற்காக ஒவ்வொரு பிரிவு மட்டத்திலும் பொருட் பதிவேட்டு புத்தகத்தை பேணிச் செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 454(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட் பதிவேட்டு புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் 09 உப திணைக்களங்களுக்குரிய பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | உப திணைக்களத்திற்காக பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை பேணிச் செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை சீராக பரீட்சிக்க முடியுமான பிரகாரம் செலவு பதிவேடொன்றில் அந்த பொறுப்புக்கள் பதியப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் பதிவேடு (CC 10) காலாண்டு மீதியாக சமப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | காலாண்டு மீதியாக மீதிகள் நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் திகதியின் பிரகாரம் கடன் பதிவேடு CC 10 படிவம் மற்றும் அந்த மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண பதிவேடு என்பன நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். |

**1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் புகையிரத திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கட்டப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் காலரீதியில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் புகையிரத | அனுமதிப்பத்திர இலக்கம் 01 இன் நிலுவை வருமானத்திற்குரிய விரிவான பதிவேடொன்று | பழைய நிலுவை வருமான மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதி பத்திரங்களின் வருமானம் ரூபா 848,334,880 ஆக இருந்ததுடன், அனுமதிப் பத்திரம் 01 வருமானத்தின் கீழ் 23 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 769,194 மீதியை அறவிட முடியாத நிலையில் காணப்பட்டது. அனுமதிப் பத்திரம் 02 இன் நிலுவை வருமானத்தின் கீழ் அறவிட வேண்டிய ரூபா 847,565,686 தொகையில் 55 சதவீதமும் 05 வருடங்களை விஞ்சிய நிலுவை மீதியாகும். | காணப்படாதிருந்தமையினால் அனுமதிப் பத்திரம் 02 கணக்கில் 2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானமான ரூபா 847,565,686 தொகையில் 2021 மார்ச் மாதம் வரையில் ரூபா 119,333,490 தொகை அறவிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புகையிரதம் மூலம் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் 31 நிறுவனங்களில் இருந்து ரூபா 118,934,728 தொகையொன்று நிலுவையாக காணப்பட்டதுடன், 16 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 20,307,403 நிலுவை பணம் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். | இந்த நிறுவனங்கள் பல வருட காலத்திலிருந்து வியாபார பற்றுச் சீட்டு முறையின் கீழ் பொருட்ளை போக்குவரத்திற்காக செயற்பட்டிருக்கவில்லை. மேலும் பல வருட காலமாக புகையிரத திணைக்களத்திற்கு உள்ள நிலுவை பணத்தை தீர்த்து வைக்குமாறு அந்த நிறுவனங்களுக்கு அறிவித்து அனுப்பப்பட்ட போதிலும், அனுப்பப்பட்ட கடிதம் அவ்வாறான நிறுவனத்தில் காணப்படாதிருந்ததாக காண்பிக்கப்பட்டு அவ்வாறே மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய நிலுவை பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புகையிரத | விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்களுக்காக | நிலுவை வருமானம் தீர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை பிரயாணிகள் வருமானம் ரூபா 10,879,857 ஆகவும், பொதிகள் மற்றும் பொருள் போக்குவரத்து நிலுவை வருமானம் ரூபா 4,992,485 தொகையும் நானாவித நிலுவை வருமானம் ரூபா 920,487 தொகையும் ஆக மொத்த நிலுவை வருமானம் ரூபா 16,792,829 ஆகும். நிலுவையாகக் காணப்பட்ட காலப்பகுதியை கவனத்தில் கொள்ளும் போது பிரயாணிகள் வருமானத்தை தீர்த்து வைப்பதைப் போல பொதிகளின் நிலுவை வருமானம் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் செலுத்தப்பட்ட பெறுமதிகள் கணக்கீட்டின் போது சீராக்கப்படாமையின் காரணமாக இந்த நிலுவை வருமானம் எழுந்திருந்தது. | வைக்கப்படாமைக்கான காரணங்களை கண்டறிந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஏனைய நிலுவை வருமானம் ரூபா 556,205,725 தொகையாக இருந்ததுடன், அந்த நிலுவை வருமானத்தை குறைப்பதற்கு தேவையான முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் களஞ்சிய வருமானம், நிலையான உணவகங்கள், சந்தை அறிவித்தல்கள் விளம்பர மற்றும் சிறிய விற்பனை கடைகள் தொடர்பான நிலுவை வருமானம் ரூபா 506,507,273 ஆக இருந்ததுடன், ஏனைய நிலுவை கடன் பெறுமதியில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டதாக இருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை குறைத்துக் கொள்வதற்குரிய முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்பட்டல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியினால் SA 92 என்ற திரண்ட பொறுப்பு அறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற 75,936,998 தொகையான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது இந்த தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | திறைசேரியின் திரண்ட பொறுப்புக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 589,250 தொகையான தொலைபேசி பட்டியல் மீதியொன்று பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தாமத வழுவினால் இது ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | தொலைபேசி பட்டியல் செலுத்துவதற்காக தனிப்பட்ட பதிவேடொன்று பேணிச் சென்றால் இவ்வாறான குறைபாடுகளை குறைக்க முடியும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் (வளங்கள் மற்றும் சேவை அல்லாத) நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு கடப்பாடு உடையதாக இருக்க முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 12 விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,733,663,663 தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்த 12 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அத்தியவசிய மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் சமீபமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற திணைக்களமாக இருந்தமையினால் சில சந்தர்ப்பங்களின் போது பொது மக்களின் சேவையினை நடாத்திச் செல்வதற்காக அத்தியவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உடன்படும் போது மிகவும் அவசர நிலைமை ஏறப்டுகின்றமையினால் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதனால் இவ்வாறான நிலைமை ஏற்படுதல் தவிர்க்க முடியாததாக இருந்தது. | |
| (ஈ) | 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டவணை இலக்கம் (iii) இன் கீழ் வருகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புக்களுக்கும் விநியோகிக்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்ய வேண்டியிருந்ததுடன், அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடோ அல்லது பொறுப்பொன்றோ முன்னைய ஆண்டின் செலவினமாக 2021 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்க முடியாதிருந்த போதும் ரூபா 810,810,778 தொகையான பொறுப்புக்கள் திறைசேரியின் SA 92 திரண்ட பொறுப்பு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட தரப்பினர் மாத்திரம் கடமைக்கு அறிக்கையிட்டமையினால் அந்த நடவடிக்கைகளை குறித்த பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | எரிபொருளுக்காக வரையறுதத் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு (மொரட்டுவை) செலுத்துவதற்குரிய ரூபா 40,960 தொகையான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 91,200,184 ஆக காண்பிக்கப்பட்டமையின் | பதிலளிக்கப்படவில்லை. | ஒருவரின் பணிகள் இன்னொருவருக்கு மேற்பார்வை செய்யும் வகையில் வேலை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |

காரணமாக பொறுப்புக்கள் ரூபா 91,159,224 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா அமைச்சின் செலவின தலைப்பில் (தலைப்பு 159) 2020 ஆம் ஆண்டிற்காக புகையிரத நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 7,812,182 தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 19,206 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் காணப்பட்ட கொவிட் 19 நோய் நிலைமையில் நாட்டில் ஏற்பட்ட நிர்வாக ரீதியான தடைகள், பதவியணியினர் வரையரையுடன் சேவை நிலையங்களுக்கு கோரப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக உரிய பணிகளுக்காக பதவியணியினரை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விரைவாக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமயம் தொடர்பான அமைச்சின் மூலம் அனுராதபுரத்தில் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக ஓய்வு கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 18,930,500 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2020 செப்டம்பர் 21 ஆம் திகதி வரையிலும் நிர்மாணித்தல் இடம் பெற்றிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிப்பட வேண்டியிருந்த போதிலும், களஞ்சிய முற்பண கணக்கிற்குரிய வெளிநாட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட கணிசமான கொடுக்கல் வாங்கல் அளவிற்குரிய பிரதான புகையிரத கணக்காளர் (வழங்கல்) பிரிவிற்குரிய 004100209027317 மற்றும் 7042682 என்ற வங்கி கணக்குகளுக்காக 2020 ஆம் ஆண்டின் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான புகையிரத கணக்காளர் (வழங்கல்) இற்குரிய 02 வங்கிக் கணக்குகளுக்குரிய இணக்க கூற்று நடவடிக்கைகளை தயாரக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.5 முற்பண மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 7,957,438 ஆகும். | பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 39 வருட காலப்பகுதியில் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணங்களின் பெறுமதி பழைய மீதிகளில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் சரியான மூல தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் எதிர்காலத்தில் இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை செலுத்தி அதற்குரிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 எல்லையினை விஞ்சியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 503 இன் பிரகாரம் முற்பண கணக்குகளின் எல்லைகளை மாற்றுவதற்காக உரிய நிதியாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் களஞ்சிய முற்பண கணக்கின் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை மற்றும் ஆகக் கூடிய வரவு மீதி எல்லை அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சியிருந்ததுடன், அதற்காக 2021 மார்ச் 31 வரையும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த எல்லை மீறல்கள் தொடர்பாக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் வகையில் அமைச்சரவைக் விஞ்ஞாபனமொன்று அமைச்சரவை செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எல்லையினை திருத்துவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | 2015 ஏப்ரல் 24 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | | |
| (i) | 03 ஆம் பந்தியின் V ஆம் பிரிவு. | 54 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தர்களின் தரவு முறைமையொன்றை நாளதுவரையாக பேணிச் | ஓய்வூதிய கோவைகள் தொடர்பாக தற்போதைய | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வு பெற்றுச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், புகையிரத திணைக்களத்திற்குரிய எந்தவொரு உப திணைக்களத்திலும் அவ்வாறான தரவு முறைமையொன்று அமுல்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது டன் முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செல்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட சகல உத்தியோகத்தர்க ளினதும் தரவு முறைமையொன்றை தயாரித்து நாளது வரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ii) | 04 ஆம் அத்தியாயம் | சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் ஆளணி கோவைகள் சரியான பிரகாரம் நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டியிருந்ததுடன், 54 வருடங்களும் 06 மாதங்களின் பின்னர் நாளதுவரையாக்கப்படும் கோவைகள் உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் திகதி வரையும் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். எனினும் 313 ஆளணி ஓய்வூதிய கோவைகளின் தகவல்களை பகுப்பாய்வு செய்த போது ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் 01 - 06 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சொன்று எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், ஓய்வூதியம் செலுத்துவதற்கு முடியுமான முறையில் 279 கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் பற்றாக்குறை கோவைகளை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு சீரற்று இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆளணி கோவைகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 09 ஆம் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 03/2015 | பன்முகப்படுத்தப்படாத ஓய்வூதிய விண்ணப்ப பத்திரம் இணையவழி முறை மூலம் விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும், ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாக | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையில் உத்தியோகத்தர்க ளின் தகவல்களை நாளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | (திருத்தம் III) | ஓய்வு பெற்றுச் செல்லும் போது உத்தியோகத்தர்களின் தரவுகள் நாளது வரையாக்குதல் தொடர்பான தரவு முறையொன்று பேணப்பட்டு அவற்றை நாளதுவரையாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வரையாக்கி தரவு முறையொன்றை பேணிச் செல்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் 2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய எம் எஸ் டி டபிள்யு/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான வினாக் கொத்துக்களுக்காக பதிலளிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | **அரச நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| (i) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், இயலளவு அபிவிருத்தி / திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் தொடர்பான பொறுப்பு கையளிக்கப்பட்டு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மனித வள திட்டமொன்று தயாரித்தல் மற்றும் இயலளவு / திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்குரிய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தி | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2018 பெப்ரவரி 06 ஆம் திகதி 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை. | பிரஜை / சேவை பெறுநர் விஞ்ஞாபனத்திற்கு இணங்க பிரஜை அல்லது சேவை பெறுநர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் , சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜை / சேவை பெறுநர் விஞ்ஞாபனம் தயாரித்தல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்காக நிறுவனத்தினால் அதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிரஜை / சேவை பெறுனர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்துவதற்குரிய திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை புகையிரத சேவையின் பொது பிரமாணக் கோவை | | | |
| (i) | 3.பீ பந்தி | மெதுவாக விநியோகிக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுக்கள் தொடர்பாக ஏபீ 26 மாதிரி படிவத்தில் வேண்டுதல் பத்திரம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்காளர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாத ரூபா 28,628,630 பெறுமதியான 49,975 நுழைவுச் சீட்டு பத்திரங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | இலங்கை புகையிரத சேவையின் பொதுப் பிரமாணக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பந்தி இலக்கம் 03 இன் 3.7 உப பந்தி மற்றும் 54 ஆவது பந்தியின் 5.5 உப பந்தி. | ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் போதும், உரித்து உறுதிப்படுத்தப்படாத பொதிகள் யாவும் தனிப்பட்ட பதிவேட்டிற்கு மாற்றப்பட்டு (OUTSTANDING) மிகுதி எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும், மாத்தறை புகையிரத நிலையத்திற்கு சொந்தமான பொதிகள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கைகள் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு தேறிய கடன் நிதி ஏற்பாடு ரூபா 29,338,097,000 ஆக இருந்ததுடன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன செலவின விடயத்திற்காக பயன்படுத்தப்பட்ட தொகை ரூபா 25,450,531,877 ஆகும். இதன் பிரகாரம் பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடு ரூபா 3,887,565,123 தொகை அதாவது 13.25 வீதமாகும்.<br><br>அதற்குரிய ஏனைய அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. | வடக்கு புகையிரத வீதியில் ஓட்டத்திற்காக குளிரூட்டப்பட்ட இரண்டு புகையிரத தொகுதிகளின் பெறுகைகள் செயற்திட்டத்திற்குரியதாக ரூபா 843 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதும், புகையிரத தொகுதிகள் 2020 ஆம் ஆண்டின் போது இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு முடியாதிருந்தது. | வெளிநாட்டு கடன் நூற்றுக்கு 100 சதவீதமும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக தேவையான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மதிப்பீடு தயாரித்தல், திறைசேரி கட்டு நிதி பெற்றுக் கொள்ளல் மற்றும் செலவின தலைப்புகளுக்கு இடையே நிதியினை மாற்றும் போது தேவையினை சரியான பிரகாரம் இனங்கண்டு மற்றும் உரிய முறையில் எதிர்வு கூறி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இன்றிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்க வேண்டியதாக காணப்பட்ட புகையிரத பெட்டிகளை மெருகூட்டுவதற்குரிய ரூபா 3,607,100,000 மொத்த தொகையும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்டிருந்தது. | மலைநாட்டு புகையிரத வீதியில் ஓட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத தொகுதிகளுக்குரிய வெளிநாட்டு கடன் கணக்கீடு செய்வதற்காக இந்த ரூபா 3,607,100,000 மேலதிக நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் இந்த செலவின விடயத்தின் செலவினங்களைச் செய்வதற்காக ரூபா 10,896,671,000 நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதும், இடைக்கால கணக்கின் மூலம் அவ்வப் போது நிதி ஏற்பாடு வழங்கப்பட்டமையினால் போதியளவான நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. அதனால் இந்த செயற்திட்டத்திற்குரியதாக கிடைத்த இறுதி செலவின உறுதிப்படுத்தல் பத்திரம் ஆன ரூபா 6,067,235,669.71 தொகையான செலவினத்தை கணக்கீடு செய்து செயற்திட்டத்தின் வேலையை பூர்த்தி செய்யும் நோக்கில் புகையிரத இலக்கம் 113 இன் கீழ் இந்த குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் முதல் 04 மாதங்களுக்காக மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிகாட்டி (KPI) வெளியிடுவதற்கும் அதன் செயல் முன்னேற்றத்தை | செயல்நடவடிக்கைத் திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டியதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | அந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திணைக்களத்தினால் நிறைவேற்ற வேண்டிய பணிப் பொறுப்புக்களை பூர்த்தி செய்தல் மற்றும் விளைவுகளை தெளிவாக இனங்காணக் கூடிய வகையில் பிரதான செயலாற்றல் குறிகாட்டி (KPI) வெளியிடப்பட்டிருக்கவில்லை. | அமுல்படுத்த வேண்டிய கால அட்டவணை தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டின் செயலாற்றலை அதன் பிரகாரம் மேற்கொண்டு திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு நாளது வரையாக்கப்படாதிருந்ததுடன், புகையிரத பொது முகாமையாளரின் கீழ் காணப்படுகின்ற ஏனைய உப திணைக்களங்களின் கட்டமைப்புக்களை சரியாக இனங்காணக் கூடிய வகையிலும் அதற்குரிய அதிகாரங்களை பண்முகப்படுத்தும் முறையிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிறுவன கட்டமைப்பை சரியான பிரகாரம் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை கையளிக்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Out Come) பெறப்படாமை

--------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது புகையிரத நிலையங்களில் நீர் வடிகட்டிகளை பொருத்துவதற்குரிய செயற்திட்டத்தின் கீழ் நீர் வடிகட்டிகளை பொருத்தும் பணிகள் தாமதமடைந்ததன் அடிப்படையில் ரூபா 1,636,640 தொகையொன்று ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிட வேண்டிய | நீர் வழங்கல் மற்றும் மின்சார வழங்கல் உரிய புகையிரத நிலையங்களில் வழங்கப்படாமையின் அடிப்படையில் தாமதமடைந்திருந்தது. | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அநுராதபுர பிரிவில் 17 புகையிரத நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த 17 நீர் வடிகட்டிகளும் செயற்பாடற்று காணப்பட்ட அவற்றின் பெறுமதி ரூபா 10,211,000 ஆகும்.

## 3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் செயற்பாட்டிற்கு கொண்டுவர வேண்டிய மற்றும் இது வரையில் அமுல்படுத்தப்படுகின்ற 18 புகையிரத அபிவிருத்தி செயற்திட்டங்கள் இனங்காணப்பட்ட போதும், வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அந்த 18 செயற்திட்டங்களின் பிரதான 05 செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அபிவிருத்தி செயற்திட்டங்கள் முழுமையான ஆய்வு மற்றும் தேவை மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) **பொருள் போக்குவரத்து** | | |
| (i) பிரீமா கம்பனியால் அவர்களின் உற்பத்தியான கோதுமை மாவை போக்குவரத்து செய்வதற்காக புகையிரத நிலையத்திற்காக கடன் அடிப்படையில் கொள்கலன் 15 பிலட் பெட் மற்றும் 30 கொள்கலன்களுடன் கொள்கலன்கள் கையாளக்கூடிய இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் கிரயம் போக்குவரத்து கட்டணத்தை மேவுகை | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த கம்பனி இணங்கியதன் பிரகாரம் பொருள் போக்குவரத்தை புகையிரதம் வழங்கி திணைக்களத்திற்கு வருமானத்தை அதிகரித்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் வகையில் உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் புகையிரத திணைக்களத்தினால் ஒரு மாதத்திற்குள் பிரயாணத் தடவைகள் 20 - 22 இற்கு இடையே அளவொன்று திருகோணமலையில் இருந்து சீதுவை களஞ்சியத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், 2021 சனவரி 06 ஆம் திகதி முதல் பெப்ரவரி 15 வரை மேற்கொள்ளப்பட்ட பிரயாண தடவைகளின் எண்ணிக்கை 05 மாத்திரமாக இருந்ததுடன், உழைக்கப்பட்ட பணம் ரூபா 2,654,750 ஆகும். | | |
| (ii) | பிரீமா கம்பனியால் அந்தந்த மாவட்டங்களில் அமைந்துள்ள களஞ்சியங்களுக்கு மாதாந்தம் போக்குவரத்து செய்யப்படுகின்ற கோதுமை மாவின் அளவு 18,100 மெற்றிக் டொன் ஆக இருந்ததுடன், அந்த அளவு புகையிரத்தின் மூலம் போக்வரத்து செய்வதாயின் திணைக்களத்திற்கு உழைக்கக் கூடியதாக உள்ள வருமானம் மாதாந்தம் 19,349,687 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கோதுமை மா போக்குவரத்தில் மாத்திரம் வருடாந்தம் உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா 232,196,244 ஆக இருந்த போதும், திணைக்களத்தினால் அது தொடர்பாக சரியான கவனம் செலுத்தி கோதுமை மா போக்குவரத்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | புகையிரதத்தின் மூலம் கோதுமை மாவினை போக்குவரத்து செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்கும் போது திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | புகையிரத திணைக்களத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டு சீமெந்து போக்குவரத்து செய்வதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 8 மில்லியன் அளவாக இருந்ததுடன், கடந்த வருடம் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது போதியளவான குறைவொன்றை காட்டியது. டோக்கியோ சீமெந்து கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரமும் அவர்களின் உற்பத்தி நாடு முழுவதும் பகிந்தலிக்கும் வலையமைப்பு புகையிரத்தின் மூலம் மேற்கொள்ளப்படுமாயின் அதன் மூலம் மாதாந்தம் உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா 2,024,492 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் டோக்கியோ கம்பனியின் சீமெந்து மாத்திரம் போக்குவரத்து செய்வதானல் வருடாந்த உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா 24 மில்லியன் ஆகும். எனினும், திணைக்களத்தினால் இந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மேற்கூறப்பட்ட பிரகாரம் சீமெந்து போக்குவரத்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | திருகோணமலை துறைமுகத்தில் இருந்து புத்தளம் வரை நிலக்கரி போக்குவரத்து செய்வதற்கு ஹொல்சீம் கம்பனியுடன் புகையிரத திணைக்களம் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிலக்கரி போக்குவத்திற்கு வசதிகளை வழங்குவதற்காக மாஹோ புகையிரத நிலையத்திற்கு அடுத்தாலுள்ள | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் போக்குவரத்து புகையிரம் மற்றும் புகையிரத பெட்டி தொகுதிகள் உரிய நேரத்தில் வழங்கி திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

புகையிரத தளமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்காக நுழைவு வீதியும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.
வருடாந்தம் நிலக்கரி போக்குவத்தில் இருந்து ரூபா 28 மில்லியன் தொகையொன்று உழைக்கக் கூடியதாக இருந்த போதும் திணைக்களத்தால் போதியளவான புகையிரம் மற்றும் புகையிரத பெட்டி தொகுதிகள் உரிய காலத்தில் வழங்க முடியாதிருந்தமையின் காரணமாக ஹொல்சீம் கம்பனி உடன்படிக்கையில் இருந்து விலகிச் சென்றிருந்தது. இதன் காரணமாக திணைக்களத்திற்கு வருடாந்தம் அறவிடக் கூடியதாக இருந்த ரூபா 28 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானமும் இழக்கப்பட்டிருந்தமையும் அதன் காரணமாக புதிதாக தயாரிக்கப்பட்ட புகையிர மேடை மற்றும் உள்நுழைவு வீதிகள் பயனற்ற சொத்தாக உட்பட்டிருந்தது. ஹொல்சீம் கம்பனியினால் திருகோணமலை துறைமுகத்தில் தரையிறக்கப்பட்ட நிலக்கரி திருகோணமலையில் இருந்து புத்தளத்திற்கு பெருந்தெருக்கள் ஊடாக போக்குவரத்து செய்வதன் காரணமாக வீதியின் முறைமையில் பாதிப்பு ஏற்படுகின்றமை, வீதி நெருக்கடி மற்றும் சுற்றாடல் காரணங்களினால் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் அதன் மூலம் கைதவறியிருந்தது.

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவை 14 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2021 மே 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் போது அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகைகள்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இந்திய கடன் உதவியன் கீழ் ரூபா 850 மில்லியன் அளவு செலவிட்டு M 11 எஞ்சின்கள் 10 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவில் திறந்த விலை கோரல்கள் ஊடாக பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு பெறுகையொன்றாக (Single Source Procurement) இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கேள்விதாரரின் மாதிரிகள், திணைக்களத்தினால் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் இணங்கப்படாத 20 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. தொழில்நுட்ப மாதிரியில் அடங்க வேண்டிய 46 நிபந்தனைகளில் 17 அதாவது 37 சதவீதம் தொழில்நுட்ப மாதிரிகளுக்கு இணங்காதிருநத்தமையின் காரணமாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அதனை இரத்துச் செய்தவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்திய எஞ்சின் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 3.2 இன் பிரகாரம் ஓட்டக் குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு காணப்படுகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகளை 03 மாதங்களுக்குள் சரி செய்து ஏனைய கப்பலிடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் கப்பலில் இடப்பட்டிருந்தது. இலங்கையில் புகையிரத வீதிகளின் நிலைமையை கவனத்தில் கொள்ளும் போது இந்த எஞ்சின் நீளத்தில் அதிகமாக இருந்த நிலைமையில் ஓட்ட பிரச்சினைகள் எழக்கூடியதாக இருந்ததுடன், 2021 ஏப்ரல் இறுதி வரையிலும் உரிய 10 எஞ்சின்களில் 3 பல்வேறு வழுக்களினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அமெரிக்க எஞ்சின் இந்திய எஞ்சினை விட பொருளாதார ரீதியில் மிகவும் இலாபகரமானதாக இருந்ததாக வெளிநாட்டு வள திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இந்திய எஞ்சின் கொள்வனவு

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டமையினால் ஒட்டு மொத்த கொடுக்கல் வாங்கல் ஊடாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அ.டொலர் 10.5 மில்லியன் அதாவது, ரூபா 1,905.23 மில்லியன் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ) இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள், பிரதான பெறுகைத் திட்டத்தின் பட்டியல் நிரற்படுத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உரிய வருடாந்த பெறுகைத் திட்டத்தில் CNC Vertical Turret Lathe இயந்திரம் கொள்வனவு செய்தல் உள்ளடக்கப்படாதிருந்த போது 2019 சனவரி 07 ஆம் திகதி ரூபா 47,072,562 பெறுமதியில் அது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2. (அ, ஆ) இன் பிரகாரம் பெறுகை ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு செயற்பாடுகளினதும் படிமுறை, கால அட்டவணை விபரிக்கப்பட்டு பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னரே உள்ள தகைமைகளை பரீட்சித்தல், உடன்படிக்கை செய்தல் மற்றும் விடயங்களுக்குரிய உடன்படிக்கை திணைக்களத்தின் சட்ட விடயங்கள் மூலம் பரீட்சித்தல் மேற்கொள்ளல் போன்ற விடயங்களின் போதும் பிரச்சினைகள் எழுந்திருந்தன. இந்த கொடுக்கல் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சகல கொள்வனவுகளும் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடடிவக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாங்கல்களுக்குரிய பெறுகைக் குழுவின் அங்கத்தர் ஒருவராக இயந்திர பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவரிடம் இருந்து இந்த பணிக்காக ரூபா 708,142 தொகை செலவழித்திருக்கும் போது அவர் ஓய்வு பெற்றுச் செல்லும் வரை அவரின் சேவையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கோட்டை மற்றும் மருதானைகளுக்கு இடையே கண்காணிப்பு கெமரா முறைமை (CCTV) ஸ்தாபிப்பதற்காக ரூபா 35,579,668 செலவில் அந்த முறைமையை ஸ்தாபித்தல் 2013 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், உத்தரவாத காலம் கழிவதற்கு முன்னர் அதாவது 2014 யூன் 12 ஆம் திகதி மின்னல் தாக்கத்தின் பின்னர் இந்த முறைமையில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் 31 கெமரா அளவிலும், மருதானை புகையிரத நிலையத்தில் 17 கெமெரா அளவிலும் செயலிழந்திருந்தது. தொழில்நுட்ப உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் உத்தரவாத காலம் இரண்டு வருடங்களாக இருந்த போதும், அது இந்த அறிக்கை திகதி வரையிலும் வழங்குனரின் மூலம் பழுதுபார்த்தலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் போது மின்னல் தாக்கத்தினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக முழுமையாக கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்படாதிருந்ததுடன், வழங்குனர் நிறுவனம் | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகை நடவடிக்கைகள் மிகவும் முறையானதாக ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு தொடர்பான நிறுவனம் ஒன்றாக இருந்ததாக பிழையாக குறிப்பிடப்பட்டு இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது பிழையாக வெளிப்படுத்தப்பட்டமை ஆரம்ப சந்தர்ப்பத்தில் தவறியிருந்ததுடன், அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தவறியிருந்தது. | | |
| (ஈ) | 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி உத்தரவாத காலம் முடிவடைவதற்கு ஒரு மாதம் காலம் காணப்படும் போது ரூபா 18,895,341 பெறுமதியான மூன்று வகையான உதிரிப்பாகங்கள் செயலிழந்து காணப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | M வகுப்பில் புகையிரத்தில் 06 வகைகள் மற்றும் W-3 வகுப்பின் புகையிரத எஞ்சின்களுக்காக Event Recorder மற்றும் Vigilance முறைமையின் ஸ்தாபிப்பதற்காக ரூபா 96,931,488 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இந்த செயற்திட்டம் தொடர்பாக குறித்துரைத்த முன்மொழிவு சமர்ப்பிப்பதற்கும் அது தொடர்பான ஆய்வினை மேற்கொள்வதற்கோ அல்லது அவை எந்த எஞ்சினுக்கு பொருத்தப்படுகின்றது என முன்னரே இனங்காணலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த உதிரிப்பாகங்களை பொருத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்ட எஞ்சின் வகை என்ன வகையானது என்ற விடயங்களும் அவ்வப் போது மாற்றப்பட்டதுடன், இந்த செயற்திட்டம் முறையற்று இருந்தமையினால் ஏற்பட்ட | கொவிட் 19 தொற்று நோயின் காரணமாக புகையிரத எஞ்சின் குறித்துரைத்த காலத்தில் விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளுக்கு முன்னர் அது தொடர்பாக முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதத்தின் காரணமாக நாணயமாற்று விகித மாற்ற தாக்கத்தின் அடிப்படையில் 2020 மார்ச் 05 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 1,916,909 தொகையொன்று மேலதிகமாக செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்து. | | |
| (ஊ) | புகையிரத்தில் இருந்து மணல் போக்குவரத்து செய்யக் கூடியதாக இருந்தமை பகிரங்க அறிவித்தல் செய்யப்படாமல் ஒரு தனியார் நிறுவனத்திற்கு புகையிரத்தில் இருந்து மணல் போக்குவரத்து செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன், கட்டணத்தை தீர்மானிக்கும் போது முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | போக்குவரத்து அமைச்சரினதும், போக்குவரத்து செயலாளரினதும் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (எ) | புகையிரத நிலையத்திற்கு தேவையான பெலஸ்ட் 200 கியூப் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,323,800 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 மற்றும் 8.9.1 வழிகாட்டிகளின் பிரகாரம் செயலாற்றல் காப்பீடொன்று பெறப்படாதிருந்ததுடன், முறையான உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்படவில்லை. 2021 பெப்ரவரி 15 ஆம் திகதியில் உள்ளவாறு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அந்த பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், இதன் காரணமாக வீதியின் வேக எல்லையை அகற்றும் பணிகள் 2019 யூன் மாதம் முதல் தாமதமடைந்து காணப்பபட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது புகையிரத பாதுகாப்பு சேவை மூலம் இலக்கம் RSS/MTL/01/2019 முதல் இலக்கம் RSS/MTL/51/2019 வரையான 51 கோவைகள் மூலம் சட்ட பிரிவிற்கு புகையிரத ஒதுக்கப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற செயற்பாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், அவை மீண்டும் கைப்பற்றப்பட்டிருக்கவில்லை. | சட்ட உத்தியோகத்தருக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் விரைவாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு** | | |
| (i) | புகையிரத திணைக்களத்தின் 917 அலுவலகங்களில் 17 இற்குரிய 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை 2021 மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனை பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | 2017 யூன் 28 ஆம் திகதி 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 இல் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் விற்றுத் தீர்த்தல்கள் தொடர்பான | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | **காணிகளை வாடகைக்கு வழங்குதல்** | | |
| | **-------------------------------------------------** | | |
| (i) | புகையிரத காணி வாடகைக்கு வழங்குதலின் போது அது தொடர்பான தரவு முறைமையொன்று காணப்படவில்லை. முறையான பிரகாரம் அவற்றை மதிப்பீடு செய்யாமை மற்றும் முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமை போன்றே உரிய வாடகை வருமானம் சரியான பிரகாரம் அறவிடப்படாமை மற்றும் இறுதியில் அவற்றின் உரித்து தொடர்பாக பிரச்சினைகள் தோன்றிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | -மேற்படி- | தரவு முறைமை விரிவாக ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | புல் வளர்ப்பதற்காக 2630 வரைபட இலக்கம் (1999 திசெம்பர் 12) ஆம் திகதிய வரைபடத்தின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 24.80 பேர்ச் அளவு நிலத்திற்கான வாடகை உடன்படிக்கை 2019 செப்டம்பர் 30 ஆம் திகதியின் பின்னர் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்திற்கு சொந்தமான இந்த ஒதுக்க காணியின் உரித்தை மீள பெற்றுக் கொள்வதற்கு இதுவரை நிர்வாகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வாடகையாளருக்கு காணியை பயன்படுத்தும் கட்டணத்தை அறவிட்டு காணி பயன்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | வாடகை உடன்படிக்கை சரியான நேரத்தில் புதுப்பித்து முறையற்ற பயன்பாட்டை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஈ) **செயற்பாடற்ற சொத்துக்கள்**

---------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | இரத்மலானை இலக்கம் 22 தொழிற்சாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 500 தொன் நிறையுடைய சக்கரம் களற்றக் கூடிய Wheel Press இயந்திரம் 02 வருட அளவிலான காலம் முதல் செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணிசமான பெறுமதியுடைய இயந்திர பொறிமுறையினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அவசர கொள்வனவாக அநுராதபுர கட்டிட பரிசோதனை அலுவலகத்திற்காக 2016 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பபட்ட ரூபா 195,000 பெறுமதியான 75 கட்டர்ஸ் அதன் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் 2020 செப்டம்பர் 22 கணக்காய்வு திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | திருகோணமலை, மாத்தறை, பொல்கஹவெல மற்றும் அநுராதபுரம் போன்ற நிரந்தர வீதி பரிசோதனை அலுவலகங்களுக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் பழுதுபார்க்க முடியுமான 172 இல்லங்களும், குடியிருக்கக் கூடிய தரத்தில் நிலையில் காணப்படுகின்ற 141 இல்லங்களும் ஆக 313 உத்தியோகபூர்வ இல்லங்கள் செயற்பாடற்று காணப்பட்டன. | -மேற்படி- | பழுதுபார்க்க வேண்டிய வீடுகளை மிகவும் விரைவாக பழுதுபார்க்க வேண்டியிருந்ததுடன், செயற்பாடற்று காணப்படுகின்ற வீடுகள் தொடர்பாக திணைக்களத்திற்கு வருமானம் ஒன்றைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கழற்றி அகற்றப்பட்ட மர சிலீபர் கட்டைகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய நிலையங்களுக்கு கையளிப்பதற்கான முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அல்லது நிர்வாக பரிசோதனை முறைமையொன்றோ அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (v) | விபத்திற்கு உட்பட்டிருந்த இலக்கம் 50 – 8777 என்ற கெப் வண்டி கணக்காய்வு திகதியான 2012 பெப்ரவரி 02 ஆம் திகதி வரையிலும் விபத்து ஏற்பட்டு 04 வருட காலம் கடந்திருந்த போதிலும், அதனை பழுதுபார்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வாகனம் துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தது. | 2021 பெப்ரவரி 09 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் நட்டத்தில் 1/5 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | இழப்பு நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், விரைவாக பழுதுபார்த்தலைச் செய்வதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | இலக்கம் 57-8179 என்ற டபல் கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக வழங்கி கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி வரையில் வருடமொன்று மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும், வாகனம் பழுதுபார்க்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன், கொரோனா தொற்று நிலைமையினால் பூச்சு வேலைகள் தாமதமடைந்திருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.7 நட்டம் மற்றும் இழப்பு

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அநுராதபுரம் புகையிரத தச்சுத் தொழிற்சாலையில் தீ ஏற்பட்டமை தொடர்பாக விரிவான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அதன் மூலம் கட்டிடத்திற்கும் அதில் காணப்பட்ட பொருட்களுக்கும் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், இது தொடர்பாக பொறுப்பு வாயந்த தரப்பினரை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புகையிரத வீதியில் வளைவுகள் (Curve) காணப்படுகின்ற நிலையான வேக எல்லையில் அதிக வேகத்தில் புகையிரம் ஓடப்பட்டமையின் காரணமாக 2020 மார்ச் 08 ஆம் திகதி புகையிரதம் தண்டவாளம் விலகியிருந்ததுடன், அந்த தண்டவாளம் விலகியதை நாளதுவரையாக்கி வீதியை தயாரிப்பதற்காக ரூபா 216,950 செலவொன்றை செய்வதற்கு திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்தது. இந்த விபத்தினால் புகையிரத எஞ்சின் மற்றும் பெட்டிகளில் இழப்பு மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | DOGSPIKES (பழைய சிலீப்பர் கட்டைகள்) Bearing Plates மற்றும் Fish plates (இணைப்பு) போன்ற இரும்பு, சந்தை விலையின் பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது கேள்வி மூலம் விற்பனை செய்வது தொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்தாதிருந்தமையின் காரணமாக இரும்பு விற்பனையின் மூலம் புகையிரத திணைக்களத்திற்கு பெறக்கூடியதாக இருந்த ரூபா 27,645,400 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | விற்பனை செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மல்வத்து ஓயா பாலத்தின் அடியில் உளள் மர கட்டைகளின் கீழ் போடுவதற்காக (Bearing Plates இற்குப் பதிலாக) 500 Base Plate 2014 நவம்பர் 18 ஆம் திகதி பெறப்பட்டிருந்த போதும் இது வரையிலும் அந்த உதிரிப் பாகங்கள் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | கொள்வனவு செய்யப்பட்டுள்ள பொருட்கள் உரிய பணிக்காக ஈடுபடுத்துவதன் மூலம் பிரதி பலன்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

### 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2021 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையிலும் பதில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.02.25 ஆம் திகதி முதல் 2021.05.07 ஆம் திகதி வரை இந்த திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 46 ஆகும். அதில் இது வரையில் 12 ஐயவினாக்களுக்கு மாத்திரமே பதில் அளிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------------

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எண்ணெய் தாங்கிகளை போக்குவரத்து செய்வதற்காக கொண்டுவரப்பட்டிருந்த M 11 வகையின் இலக்கம் 984 என்ற புகையிரத எஞ்சின் 2020 ஒக்டோபர் 16 ஆம் திகதி முதல் காலி ஓட்டக் கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், காலி புகையிரத நிலையத்தில் உள்ள பொயின்ட் (Points) மற்றும் Crossover என்பவற்றின் நீள அளவு போதியதாக இல்லாமையினால் இந்த எஞ்சின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | புதிதாக புகையிரத எஞ்சினை கொள்வனவு செய்யும் போது காணப்படுகின்ற வளங்களை பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு மாநகர சபை எல்லைக்குரிய 180 புகையிரத ஆதனங்களுக்காக 2019 திசெம்பர் 31 வரை செலுத்த வேண்டிய நிலுவை ஆதனவரி தொகை ரூபா 40,627,132 ஆகும். இந்த நிலுவை தொகைக்கு உரியதான ஆதனங்களின் பயன்பாட்டை சரியாக இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்துரைத்த திகதியில் ஆதன வரி செலுத்தாமையினால் தண்டப்பணம் செலுத்துவதற்கு ஏற்படுகின்றமையினால் ஆதனங்களின் உரித்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 சனவரி 07 ஆம் திகதி துறைமுகத்திற்கு கிடைக்கப் பெற்ற CNC Vertical Turret Lathe இயந்திரத்திற்குரிய நாணய கடிதப் பெறுமதி செலுத்துவதற்காக 05 சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பெப்ரவரி 18 ஆம் திகதியே பணம் வங்கியில் இடப்பட்டிருந்தது. அவ்வாறு வங்கிக்கு இடுவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக ரூபா 86,547 வங்கி வட்டியொன்று வங்கியினால் அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த கொடுப்பனவுகளைச் செய்வதற்கு உரிய தாமதத்தின் அடிப்படையில் துறைமுக அதிகார சபை மற்றும் கப்பல் கம்பனிகளுக்கு முறையே தாமதக் கட்டணமாக ரூபா 2,816,576 தொகை மற்றும் ரூபா 2,933,031 தொகைகள் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | -மேற்படி- | செயற்திறனான நடவடிக்கைகளை எடுத்து இவ்வாறான தேவையற்ற செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டம் அல்லாத ஜப்பான் நிதி உதவியின் கீழ் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக டெரக் அளவிடல் (Track Gauges), ஹேன்ட் டை டெம்பர் தொகுதி (Hand Tie Tamper Sets) மற்றும் 40 ட்ரொலி ட்ரக் (Trolleys Track) என்பன கிடைத்திருந்ததுடன், அதில் 02 அநுராதபுர நிலையான வீதி பரிசோதகர் அலுவலகத்திற்கு 2020 சனவரி 05 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. போதியளவான பெலஸ்ட் காணப்படாமையின் காரணமாக அதில் ஒரு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | இந்த இயந்திர பொறிமுறைகளில் இருந்து ஆகக் கூடியளவில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பொருட்கள் சரியான நியமத்துடனும் சரியான அளவிலும் கிடைத்தமைக்கு கொடுப்பனவு உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு எந்தவொரு உறுதிப்படுத்துலும் இன்றி வழங்குனருக்கு பணம் செலுத்தியதன் காரணமாக வழங்கப்படாத பொருட்களுக்காக ரூபா 80,189,340 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவு செயற்பாடுகள் முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 1980 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், மொத்த கொடுப்பனவுகளில் 42 சதவீதமான ரூபா 33,681,581 தொகை 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்துதல்களின் சேமிப்பு 58 சதவீதம், 2010 ஆம் ஆண்டின் பின்னரான கொடுப்பனவுகளாக இருந்ததுடன், அதிலும் 40 சதவீதமான ரூபா 31,900,907 தொகை 2016 முதல் 2020 வரையான 05 வருட காலத்தில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளாகும். | -மேற்படி- | வழங்கப்படாத பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத நாணய கடிதத்தின் பெறுமதி ரூபா 594,378,058 ஆக இருந்ததுடன், அதில் 35 | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக சரியான விசாரணையினை செய்து இந்த நாணயக் கடிதத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் ஆன ரூபா 207,564,302 தொகை 03 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடையிலான பழைய மீதியாகும். பணம் செலுத்தி 03 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த மீதியை GRN மூலம் தீர்த்து வைக்கப்படாத காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 207 மில்லியனுக்கு மேற்பட்ட இந்த கொடுப்பனவுகள், வழங்கப்படாத பொருட்களுக்கான பணம் எவ்வளவு என கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | S 10 - Class Power Coaches இற்காக தேவையான உதிரிப்பாகங்களுக்காக 09 வகையின் கீழ் 663 உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரப்பட்ட போதிலும், 04 வகைகளுக்குரிய 540 உதிரிப்பாகங்கள் தற்போது தேவையற்றதாக இருந்தது என காண்பித்து மதிப்பீட்டில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்களில் 04 வகையும் தேவையான இருப்பு காணப்படும் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் நிறுவனத்தின் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் தேவையினை தீர்மானித்தல் சரியான திட்ட முறைமையின் அடிப்படையிலும் சரியான | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | இதன் மூலம் திணைக்களத்தின் நிதியம் தேவையற்ற வகையில் நிறுத்தி வைத்தல் மேற்கொள்ளப்படுகின்றமையினால் அவ்வாறில்லாமல் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆய்வின் பிரகாரமும் மேற்கொள்ளப்படாதிருந்தமை யினால் தேவையற்ற இருப்பை சேகரிப்பதற்காக ரூபா 19,515,262 தொகை செலவிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஐ) | கடந்த 16 வருட காலத்தில் களஞ்சியத்தில் புகையிரத உதிரிப்பாகங்கள் இருப்பு ரூபா 1,905 மில்லியன் முதல் ரூபா 6,392 மில்லியன் வரையான வீச்சில் காணப்பட்டதுடன், அது 16 வருடங்களில் 14 வருடங்களின் போது உரிய கொள்வனவுகளை விட குறைவான அளவு மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே கையிலுள்ள இருப்பு 16 வருட காலத்தின் போது மூன்று மடங்காகி இருந்தது. | சராசரியான இருப்புடன் ஒப்பிடும் போது மிகவும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றமை கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அவதானிப்பு சரியானது என ஏற்றுக் கொள்கின்றோம். | நியம இருப்பு மட்டத்தை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | இருப்பு தேவையினை இனங்கண்டு களஞ்சிய முற்பண கணக்கிற்காக இருப்புக்கள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், தேவையினை இனங்காணாமல் இருப்புக்களை கொள்வனவு செய்வதன் காரணமாக இறுதி இருப்பில் கனிசமான பெறுமதியொன்று பயன்படுத்தப்படாத இருப்பு விடயத்திற்கு உட்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள இருப்பு மீதியில் ரூபா 298,187,731 தொகையான இருப்பு விடயங்கள் கடந்த 05 வருட காலத்தில் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற இருப்பு தொடர்பாக சரியான ஆய்வொன்றை மேற்கொண்டு கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இருப்பு மீதி தொடர்பாக பொருத்தமான பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | வரையறுத்த நிதியை தேவையற்ற வகையில் நிறுத்தி வைக்காமை தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குருநாகல் இயந்திர உபகரண அதிகார சபையில் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள இலக்கம் 68-5441 என்ற டிப்பர் வாகனத்திற்காக மாதாந்த வாடகைப் பணத்திற்கு மேலதிகமாக டீசலிற்காகவும் செலவிடப்பட்டதுடன், 2020 சனவரி முதல் ஆகஸ்ட் வரை (ஏப்ரல், மே மாதங்கள் தவிர) கிலோ மீற்றர் 16,579 ஓடியதற்காக ரூபா 845,539 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2020 யூன் 08 முதல் 2020 செப்டம்பர் 22 வரை ரூபா 112,100 பெறுமதியுடைய டீசல் 1,180 லீட்டர் பெறப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக ஓட்டக் குறிப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | செலவிடப்பட்ட எரிபொருள் செலவினத்திற்காக உரிய ஓட்ட அட்டவணை பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 3.11 நிதி மோசடிகள்

---------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை சேவைக்கு அறிக்கையிடாதிருந்த பிரதி புகையிரத பாதுகாப்பு அத்தியட்சகர் (மேவுகை) அத்தியட்சகருக்கு அந்த காலத்திற்காக விடுமுறை அங்கீகரிக்கப்படாதிருந்தமையால் 2019 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 வரை | அந்த தொகை உரிய உத்தியோகத்தரின் ஓய்வூதியத்தில் இருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையே சரியான தொடர்பு பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சம்பளமாக ரூபா 160,924 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பணிப்பாளரின் (நிர்வாகம்) 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய கே. 01 கடிதத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் 2020 சனவரி 09 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுச் சென்றிருக்கும் போது 2020 சனவரி முதல் ஒக்டோபர் 31 வரை ரூபா 855,235 தொகை சம்பளமாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

---

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டு வரையில் நிறைவேற்ற வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை கண்டறிதல், அமுல்படுத்துதல் மற்றும் அவற்றின் அடைவை அளவீடு செய்தவற்காக தேவையான குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்குரிய சரியான தரவு முறையொன்றை ஏற்பாடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேவையான இலக்குகளை இனங்காண்பதற்கு சரியான தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவையை நிறைவேற்றுதல்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்தின் இணையதளம் மூலம் பொது மக்களின் தேவைகள், நிறுவனம் தொடர்பான முறையீடுகள் அல்லது பாராட்டினைத் தெரிவிப்பதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | இணையதளத்தின் மூலம் பொது மக்களின் தேவைகள், நிறுவனம் தொடர்பான முறையீடுகள், பாராட்டினைத் தெரிவித்தல் என்பவற்றிற்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புகையிரத திணைக்களத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிரில் வெற்றிடங்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | சேவை தேவையினை கவனத்தில் கொண்டு பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 7,335 ஆக இருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 37 சதவீத அளவாகும். திணைக்களத்தினால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 335 பதவியணியினர்கள் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முறையான அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | திணைக்களத்தின் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதற்கு நடவடிக்கை எடுக்காமல் திணைக்கள சேவையில் ஓய்வுபெற்றுச் சென்ற 234 உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையின் அடிப்படையில் வெற்றிட பதவிகளுக்காக புதிதாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான படிமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |